மே 20, 2015

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

*இனிமையான குழந்தாய்: நான் தூய்மையாக்குபவர் என்று அழைக்கப்படுகின்றேன். அவர் மிகவும் எளிமையாக இருந்து விளக்குகின்றார்: அனைத்து முனிவர்கள் முதலியவர்களுக்கும் நான் தந்தையாவேன். மேலும் ஒவ்வொரு தனித்தனி ஆத்மாவிற்கும், சங்கராச்சார்யார் முதலியோருக்கும் கூட நான் தந்தையாவேன். நிச்சயமாக, அவர்களின் உடல்களுக்கான தந்தை ஸ்தூலமானவர், ஆனால் நான் அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தையாவேன். நான் இப்போது தனிப்பட்ட முறையில் உங்கள் முன் அமர்ந்திருக்கிறேன்.*

***இனிமையான பாபா, நாள் பொழுதில் இந்த விழிப்புணர்வை நான் மீண்டும் உறுதி செய்துக் கொள்கின்றேன்:*** நான் உங்கள் முன் அமர்ந்திருக்கிறேன். நீங்கள் என் தந்தையும் தூய்மையாக்குபவரும் ஆவீர்கள். நான், ஆத்ம உணர்வுடையவராகி உங்களை நினைவு செய்வதுடன், உங்கள் ஸ்ரீமத்தை பின்பற்றுவேன்.

**சமார்த்தி அல்லது சக்தி**

**நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.**

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

*பாபா ஆத்மாவிற்கு: இந்த விஷயங்களை பிரம்மா கூறுகின்றார் என நீங்கள் நினைக்க வேண்டாம். எப்போதும் சிவ்பாபா தான் அதை கூறுகின்றார் என கருதவேண்டும். நீங்கள் சிவபாபாவிற்கு மதிப்பு கொடுக்க வேண்டும்.*

மதிப்பும் மரியாதையும் நிரம்பியிருக்கின்ற என்னுடைய மனோபாவத்தை பாப்தாதாவை நோக்கி இசைந்திருக்க செய்கின்றேன். பிரம்மா பாபா என்னுடைய ஆன்மீக பயணத்தை எந்தளவு ஊக்குவிக்கின்றார் என நினைத்து பார்கின்றேன். சிவ்பாபா தான் எனக்கு கற்பிக்கின்றார் என தெரிந்துகொண்டு நான் பணிவாக கேட்கின்றேன்.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

*பாபா ஆத்மாவிற்கு: பல குழந்தைகள் தொடர்ந்தும் வந்து" சிவ்பாபா சிவ்பாபா" என்று கூறுகின்றார்கள். பிறகு, அவர்களுடைய இறுதியான எண்ணங்கள், அவர்களுடைய இலக்கிற்கு அவர்களை கொண்டு செல்லும். ஒரு இராஜ்ஜியம் ஸ்தாபனம் ஆகிக்கொண்டிருக்கின்றது.*

*ஒரு இராஜ்ஜியம் ஸ்தாபனம் ஆகிக்கொண்டிருக்கின்றது* என்பதை நான் நினைவு செய்கின்றேன். நான் அனைவரையும் புரிந்துணர்வுடனும் இரக்கத்துடனும் பார்க்கின்றேன். என்னுடைய திருஷ்டியில் என்னுடைய இலக்கை வைத்திருக்கும்போது, என்னை சுற்றிலும் ஆத்மாக்கள் நடிக்கின்ற வெவ்வேறு பாகங்களை ஒரு பற்றற்றப் பார்வையாளராகப் பார்க்கின்றேன்.

## ஓர் அலையை உருவாக்குதல்

**நான் மாலை** *7:00* **மணி முதல்** *7:30* **மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.**